


தேனி நாடார் சரஸ்வதி மகளிர் கல்லூரியில் 7, 8, 9 (07.03.2026 முதல் 09.03.2026) வரையிலான மூன்று நாட்கள் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற விழாவில் 30 கல்லூரி மாணவிகள் போட்டியில் பங்கேற்று பரிசுகளை வென்றனர். இதில் நமது கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து 10 மாணவிகள் பங்கேற்றனர் . இதில் தனி நடனப்போட்டியில் வணிகவியல் துறையைச் சேர்ந்த M. லேகாஸ்ரீஇரண்டாம் பரிசினை வென்றார்.



தேனி நாடார் சரஸ்வதி மகளிர் கல்லூரியில் 7, 8, 9 (07.03.2026 முதல் 09.03.2026) வரையிலான மூன்று நாட்கள் நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற விழாவில் 30 கல்லூரி மாணவிகள் போட்டியில் பங்கேற்று பரிசுகளை வென்றனர். இதில் நமது கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து 10 மாணவிகள் பங்கேற்றனர் . இதில் குழு நடனப்போட்டியில் ப ங்கேற்று மாணவிகள் இரண்டாம் பரிசினை வென்றார்.



ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) பெரியகுளத்தில் 11.08.2026 அன்று கல்லூரிகளுக்கு இடையிலாக நடைபெற்ற Histo – Fest – 2026 போட்டியில் 15 கல்லூரிகள் பங்கேற்றன. இதில் கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து 15 மாணவ மாணவிகள் பங்கேற்ற இந்நிகழ்வில் ஒட்டுமொத்த சாம்பியன் (Over All Championship) பட்டத்தை கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பிடித்தது



ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) பெரியகுளத்தில் 27.08.2026 அன்று கல்லூரிகளுக்கு இடையிலாக நடைபெற்ற Com –Tech Nexus – 2k26 இளங்களை வணிகவியல் கனிணி பயன்பாடுகள் போட்டியில் 18 கல்லூரிகள் பங்கேற்றன. இதில் கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து 16 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இதில் இரண்டாம் இடத்தை (Runner) கோட்டூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பிடித்தது



கம்பம் ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரியில் 17.09.2026 அன்று நடைபெற்ற CAPTCHA ' 26 கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் 5 கல்லூரிகள இடம்பெற்றன. இதில் நமது கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக 11 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர் . இதில் முகத்தில் வர்ணம் தீட்டுதல் (Face Painting) போட்டியில் கனிணி அறிவியல் துறை மாணவிகள் T. மகேஸ்வரி, A. கனிமொழி ஆகியோர் இரண்டாம் இடம் பெற்றனர்.



வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23.09.2026 அன்று கணினிஅறிவியல்துறை சார்பில் நடைபெற்ற International Paper Conference – Artificial Intelligence, Data Science, Cyber Security and Digital Computing (ICET-AIDCDC - 2026) போட்டியில் 20 கல்லூரிகள் பங்கேற்றன. இதில் நமது கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக 12 மாணவ, மாணவிகள் பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றனர்.



மதுரை அருள் ஆனந்தர் கல்லூரியில் 29.09.2026 அன்று வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடுகள் துறை சார்பில் நடைபெற்ற Bridging Trading and Technology AI and IKS for Ethical Commerce – National Conference போட்டியில் 15 கல்லூரிகள் பங்கேற்றன. இதில் நமது கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக 18 மாணவ, மாணவிகள் பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றனர்.



பெரியகுளம், மேரி மாத கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 09.10.2026 அன்று நடைபெற்ற THARANG' 2026 கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் 16 கல்லூரிகள் பங்கேற்றன. இதில் நமது கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக 36 மாணவ, மாணவிகள் பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றனர்.





தேனி கல்லூரி மாணவர்களுக்கான "ஒன்றிணைவோம்" விழிப்புணர்வு நிகழ்ச்சி!

தேனி சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பில் கம்மவார் கலைக் கல்லூரியில் ஒன்றிணைவோம் நிகழ்ச்சி 23.10.2026 அன்று நடைபெற்றது. இதில் 26 கல்லூரிகள் பங்கேற்ற நாடகப் போட்டியில் வென்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP)பரிசளித்தார். மாணவர்களிடையே சமத்துவத்தையும், மனித உரிமை விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என துணை கண்காணிப்பாளர் (DSP) மனிஷா தெரிவித்தார். இதில் நமது கோட்டூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக 5 மாணவிகள் பங்கேற்று நான்காம் இடத்தைப் பிடித்து சான்றிதழ்கள் பெற்றனர்.



பெரியகுளம், கைலாசபட்டியில் உள்ள திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 04.11.2026 அன்று நடைபெற்ற NATIONAL YOUTH FESTIVAL VBYLD – 2027 கல்லூரிகளுக்கு இடையிலான போட்டியில் 6 கல்லூரிகள் இடம் பெற்றதில் நமது கோட்டூர் கல்லூரி சார்பாக 7 மாணவிகள் பங்கேற்றனர். இதில் Awareness Folk Dance குழு நடனப்போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் இரண்டாம் இடம் பெற்றனர்.